**<u>மதுக்கரை நகராட்சியில் 25.01.2023ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.</u>**

**மன்றப் பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023ம் நாளிட்ட செயல்முறை ஆணை ந.க.எண்.33552/2022/EA2–SWM-7ன் மூலம் மதுக்கரை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து உரமாக்கும் மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வருவதற்கு ஒரு டன்னிற்கு ரூ.5663 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள மதுக்கரை நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ.286.67 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை பொது நிதி மற்றும் 15 CFC / SBM Tied grant – லிருந்து மேற்கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ளது. இவற்றை செயல்படுத்தும் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் இத்திட்டத்தின் அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றுவதுடன் இதற்காகும் செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1570/2022/அ1

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.123</u>

அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 25.01.2023

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி